செ.வெ. எண்: 475 நாள்: 11.08.2012

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (11.8.2012) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் மதுரை கிளையினையும், சென்னை – அம்பத்தூர் மண்டல உணவுப் பொருள் வழங்கல் துறை உதவி ஆணையர் அலுவலகக் கட்டடம் மற்றும் சென்னை – தரமணியில் நான்கு நியாய விலைக் கடைகளுக்கான புதிய கட்டடங்கள் ஆகியவற்றை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள்.

சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வரும் தமிழ்நாடு மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் சேவை விரைந்து சென்றடைந்து, அதன் பயன்பாடு தென்மாவட்டங்களான கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, மதுரை, திண்டுக்கல், தேனி, இராமநாதபுரம், விருதுநகர், சிவகங்கை, புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் கரூர் ஆகிய 13 மாவட்ட மக்களுக்கும் கிடைத்திடவும், அவர்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையிலும் அப்பகுதி நுகர்வோர் தங்கள் வழக்குகளை பதிவு செய்வதற்கும், தேவையற்ற காலவிரயத்தையும், பயண செலவினத்தையும் தவிர்க்க ஏதுவாகவும் தமிழ்நாடு மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் மதுரை கிளையினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில் காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று, 91 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட சென்னை வடக்கு அம்பத்தூர் மண்டல உணவுப் பொருள் வழங்கல் துறை உதவி ஆணையாளர் அலுவலகப் பயன்பாட்டிற்கான புதிய கட்டடத்தை காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள். இவ்வலுவலகக் கட்டடத்தினை திறப்பதன் மூலம் 22 சென்னை மாநகராட்சி வார்டுகள், அடையாளம்பட்டு, அயனப்பாக்கம் கிராம ஊராட்சி பகுதிகள், வானகரம் பேரூராட்சி மற்றும் திருவேற்காடு நகராட்சி பகுதிகளைச் சேர்ந்த 1 லட்சத்து 98 ஆயிரத்து 615 குடும்பங்கள் பயன்பெறுவார்கள்.

சென்னை, தரமணி பேருந்து நிலையம் அருகிலுள்ள கானகம் சாலையில் 31 லட்சத்து 74 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் சோலார் மின் வசதியுடன் கூடிய நான்கு நியாய விலைக் கடைகளுக்கான புதிய கட்டடங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கல் துறை, பொது விநியோகத் திட்டத்தினை சிறப்பாக கண்காணிக்கும் வகையில் 27 லட்சத்து 72 ஆயிரம் ரூபாய் செலவில் 5 புதிய ஜீப்புகளை 5 மாவட்ட வழங்கல் அலுவலர்களுக்கு இன்று வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள், மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் தலைவரும், நீதிபதியுமான திரு. ஆர். இரகுபதி, தலைமைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைச் செயலாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையர் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.
நாள்: 11.8.2012